Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 24, 2023

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 24, 2023 | ஒளி: 09 கதிர் 112 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | Free



## தவளை இரத்தத்தை உறிஞ்சும் நுளம்பு

இலங்கையில் தவளைகளின் இரத்தத்தை மட்டும் உறிஞ்சும் புதிய வகை நுளம்பு இனம் ஒன்று இனங்காணப் பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீரிகம, ஹந்துருமுல்ல பிரதேசத்தில் இந்த நுளம்பு இனம் காணப்படுவதாக பூச்சியியல் திணைக்களத்தின் பூச்சியியல் அதிகாரி கயான் ஸ்ரீ குமாரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள நுளம்பு இனங்களின் எண்ணிக்கை 156 ஆக அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளும் கட்சியின் பிழை ஜனாதிபதிக்கு புரிந்தது



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் அவரை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில,

தொடர்ச்சி P2

## அமைச்சரவையில் ‘அதிருப்தி’; மாற்றம்

அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில், திங்கட்கிழமை (23) பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில், அமைச்சரவை அந்தஸ்தற்ற அரச பெருந்தோட்டத் தொழில் முயற்சி அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் வைத்தே இந்த பதவிப்பிரமாணம் நடைபெற்றது,

சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல்ல சுற்றாடல் அமைச்சராகவும், சுற்றாடல் அமைச்சராக இருந்த மகிந்த அமரவீர விவசாய அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சராக வைத்தியர் ரமேஷ் பத்திரனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய அமைச்சிற்கு மேலதிகமாகவே பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக மகிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளதோடு, கைத்தொழில் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக வைத்தியர் ரமேஷ் பத்திரன சுகாதார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது நிதி இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அமைச்சரவை அந்தஸ்தற்ற தோட்டத் தொழில் முயற்சிகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சராகப் பதவிவகித்த, தற்போதைய சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அவருக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் நம்பிக்கையில்லா பிரேரணையும் கொண்டுவரப்பட்டது.









தொடர்ச்சி P2

## மொட்டு கடும் அதிருப்தி



அமைச்சரவை மாற்றம் ஜனாதிபதியின் தவறான முடிவு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடுமையாக விமர்சித்துள்ளது.

ஜனாதிபதி இந்த விடயத்தில் தவறான முடிவினை எடுத்துள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்

தொடர்ச்சி P2

## “தலை வலிக்குத் தலையணை மாற்றமா?”



நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சரை மாற்றுவது மட்டும் தீர்வாக அமையாது என்று குறிப்பிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், “இந்தப் பதவி மாற்றமானது

தொடர்ச்சி P2

## “பிரச்சினைகளை மூடி மறைக்கும் முயற்சி”



அமைச்சரவை மாற்றமொன்று இடம்பெற்றுள்ளது. இதனால் பிரச்சினைகள் தீருமா? இல்லை, அமைச்சுக்களையும், அமைச்சர்களையும் மாற்றி பிரச்சினைகளை மூடி மறைக்க முற்படுகின்றனர் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

8 புத்தக அட்டைக்குள்

## கொக்கெய்ன் கடத்திய பெண்



ஆங்கில சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டைக்குள் மிகவும் சூட்சகமான முறையில் கொக்கெய்ன் போதைப்பொருளை இலங்கைக்கு கடத்திவந்த வெளிநாட்டு பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த 42 வயதான பெண்ணே இவ்வாறு போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

பாராளுமன்றத்தில் ரகளை

## விசாரணை குழு புதன் கூடுகிறது



இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய பெரேரா மற்றும் ரோஹன பண்டார ஆகியோருக்கு இடையில் பாராளுமன்ற வளாகத்திற்குள் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழு, புதன்கிழமை (25) கூடவுள்ளது.

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் கடந்த வெள்ளிக்கிழமை (6) பாராளுமன்ற வளாகத்தினுள் காரசாரமான வார்த்தை பிர பியோகங்கள் இடம்பெற்றன.

தொடர்ச்சி P2

## வெள்ளி, ஞாயிறு கிழக்கில் தடை

கிழக்கு மாகாணத்தில் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் வகுப்புகளை நடத்துவதைத் தடைசெய்து மாகாண கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

சமயக் கல்வியில் ஈடுபடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத வகையில் தனியார் வகுப்புகள் நடத்தப்படுவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விச் செயலாளர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கைவிடப்பட்டுள்ள காணிகளில்

## பயிர் செய்ய தேவையான சட்டங்களை திருத்தவும்



அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்துக்கு சம்பந்தமான, அரசுடைமையுள்ள கூட்டுத்தாபனங்கள், சபைகள், பணியகங்கள், அதிகாரசபைகள் உள்ளிட்ட நிறுவங்களின் இது வரை பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கப்படாத 2012 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினை

தொடர்ச்சி P2

## போதையில் சிக்கினால் பொலிஸுக்கு வாசி

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்யும் ஒவ்வொரு பொலிஸாருக்கும் 5,000 ரூபாவை வழங்கும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்த போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவு அறிவித்துள்ளது. இந்த திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை செயற்படுத்தப்படும், இந்தக் காலகட்டத்தில், மதுபோதையில் வாகனம் செலுத்தும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு அவரது சம்பளத்தில் 5,000 ரூபாவை கூடுதல் கொடுப்பனவாகவும் வழங்கப்படும்.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

## மூன்று வருடங்களுக்குள் மீள்குடியேற்றம் நிறைவடையும்



**இடம்பெயர்ந்த 274,120 குடும்பங்களில் 917,143 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்**

**1,701 குடும்பங்களைச் சேர்ந்த 4,999 பேரே மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளது**

**யுத்தத்தின் போது இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்த 3828 குடும்பங்களைச் சேர்ந்த 9683 பேர் தாயகம் திரும்பினர்**

அடுத்த மூன்று வருடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள-மக்களின் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க-தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த 274,120 குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் 917,143 பேர் அந்த மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார் இதன்படி 1,701 குடும்பங்களைச் சேர்ந்த 4,999 பேரே மீள்குடியேற்றப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மன்னார், எருக்கலம்பிட்டி "குவைத் ஸகாத்"

தொடர்ச்சி P2

## இலங்கையில் மனித வர்த்தகம்: இந்தியாவில் ஒருவர் கைது

இலங்கையில் மனித வர்த்தகத்தில் ஈடுபட்ட முக்கிய சந்தேக நபர் ஒருவரை இந்தியாவின் தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

இந்தியாவின் இராமநாதபுரத்தைச் சேர்ந்த மொஹமட் இம்ரான் கான் (39) என்பவரே சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.2021 ஆம் ஆண்டு இலங்கையர்கள் 61 பேரை இந்தியாவிற்கு அழைத்து சென்று ஏனைய நாடுகளுக்குச் சட்டவிரோதமான முறையில் இவர் அனுப்பிவைக்க முயற்சித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஆளும் கட்சியின் பிழை ஜனாதிபதிக்கு புரிந்தது

கெஹெலிய ரம்புக்வெல்ல அமைச்சுப் பதவியை வகிக்க முடியாது என ஜனாதிபதி தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் திங்கட்கிழமை (23) இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை தீர்மானத்தில் ஆளும் கட்சியினர் நடந்து கொண்டது பிழை எதிர்க்கட்சி நடந்துக்கொண்டது சரி என்று ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார்.

இங்கு நெருக்கடியாக இருக்கும் மிகப்பெரிய விடயம் ஊழல் மோசடியாகும். ஆகவே அமைச்சர் ரமேஸ் பத்திரண இந்த திருடர்களுடன் போராடி ஜெயிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## மொட்டு கடும் அதிருப்தி

பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து கெஹெலிய ரம்புக்வெலவை மாற்றியது முற்றிலும் தவறான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

" கெஹெலியவிற்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் சில நடவடிக்கைகளை எடுப்பது சரியானதா என்பது குறித்து ஜனாதிபதி சிந்தித்திருக்க வேண்டும். புதிய சுகாதார அமைச்சராக ரமேஸ் பத்திரனவை நியமிக்கும் தீர்மானம் தொடர்பில் எமது கட்சியின் அதிருப்தியை ஏற்கனவே ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளோம்." என சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு அமைச்சர் பதவிகளை வழங்கியமை குறித்தும் சாகர அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

"இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் அதிகளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி பொதுஜனபெரமுனவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கிவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர்களிற்கு அதனை வழங்குவது தவறான முடிவு. நாங்கள் இதனை கடுமையான எதிர்க்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெள்ளி, ஞாயிறு கிழக்கில் தடை

இதனால், ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி வரையிலும், மழை பெய்யும் நாட்களில் முழு நாளும் வகுப்புகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உதவியை நாடுமாறு சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அமைச்சரவையில் 'அதிருப்தி'; மாற்றம்

அது தோற்கடிக்கப்பட்டது.

தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதிச் செய்தல், தரமற்ற நிறுவனங்களில் இருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்தமை மற்றும் விலைக்குறைந்த மருந்துகளை அதிகூடிய விலைக்கு கொள்வனவுச் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளும் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

எனினும், அவரை அமைச்சரவையில் இருந்து நீக்காது, மற்றுமோர் அமைச்சர் பதவியை வழங்கியமை தொடர்பில் ஒருசில அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசியல் அவதானிகள் கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கொக்கெய்ன் கடத்திய பெண்

கைது செய்யப்பட்ட வெளிநாட்டு பெண் பிரஜையிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் இலங்கையின் பெறுமதி சுமார் இருபத்து மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரான இந்தோனேஷியாவைச் சேர்ந்த குறித்த பெண், இலங்கைக்கு முதற் தடவையாக இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் எனவும், அவர் அந்த நாட்டில் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த பெண், போதைப் பொருளுடன் முதலில் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து தனது பயணத்தைத் ஆரம்பித்து, கட்டாரில் தோஹா ஊடாக ஞாயிற்றுக்கிழமை (22) மதியம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

மிகவும் நுட்பமான முறையில் 8 ஆங்கில சிறுவர் கதை புத்தக அட்டைக்குள் மறைத்து வைத்திருந்த 04 கிலோ கிராம் கொக்கெய்ன் மற்றும் 598 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

குழந்தைகளுக்கான ஆங்கில கதைப் புத்தகங்களின் அட்டைகளை வெட்டி அதனை அடுக்கி, அதற்குள் போதைப்பொருளை அடைத்து, பயணப் பொதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## போதையில் சிக்கினால் பொலிஸ்க்கு வாசி

என போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகளை ஊக்குவிக்கவும் விபத்துகளைத் தடுக்கவும் இந்த முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டதாக பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்தார்.

## இலங்கையில் மனித வர்த்தகம்: இந்தியாவில் ஒருவர் கைது

முகமது இம்ரான் கான் மனித கடத்தல் மட்டுமின்றி பல குற்றங்களுக்காகவும் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் என்றும், 2021 ஆம் ஆண்டு இலங்கையைச் சேர்ந்த ஈசான் என்ற நபருடன் சேர்ந்து கனடாவில் சட்டப்பூர்வ வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருவதாகவும் கூறி ஏமாற்றி, தமிழகத்தில் பல இடங்களில் அவர்களை தங்க வைத்துள்ளார் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அது மாத்திரமன்றி ஈசன் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பயிர் செய்ய தேவையான சட்டங்களை திருத்தவும்

தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பரிந்துரை வழங்கியது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய ஆண்டறிக்கைகள் நவம்பர் 30 க்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அத்துடன், அரச நிறுவனங்களை மீள்கட்டமைப்பு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் இணைக்கக்கூடிய அரச தொழில் முயற்சி திணைக்களத்துக்கு சம்பந்தமான நிறுவனங்கள் தொடர்பான அறிக்கையொன்றை வழங்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

அத்துடன், குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான தோட்டங்கள் தொடர்பில் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், பெருந்தோட்ட நிறுவனங்களினால் கைவிடப்பட்டுள்ள பல ஏக்கர்கள் அளவான காணிகளில் அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு வழங்க தேவையான சட்டத் திருத்தங்களை உடனடியாகத் தயாரிக்குமாறும் குழு இதன்போது அறிவுறுத்தல் வழங்கியது.

அதற்கு மேலதிகமாக, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான புதிய சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக குழுவில் புலப்பட்டது. அதற்கமைய தற்போதைய தொழில் போக்குகளுக்குப் பொருத்தமான வகையில் புதிய நான்கு பட்டப்படிப்புகள் மற்றும் பல்வேறு பாடநெறிகளை இதன்மூலம் அறிமுகப்படுத்த எதிரிபார்ப்பதாக இதன்போது அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் குறிக்கோளுக்கும் நோக்கத்துக்கும் பொருத்தமான வகையில் இந்த நடவடிக்கை இடம்பெற வேண்டும் என குழு இதன்போது சுட்டிக்காட்டியது. அதற்கமைய, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை அதன் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய பல்கலைக்கழகமொன்றாக மாற்றும் நடவடிக்கைகளுக்காக உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் நிதியமைச்சின் தேசியத் திட்டமிடல் திணைக்களமும் வரவுசெலவுத்திட்ட திணைக்களமும் பிரதிநித்துவம் செய்யும் வகையில் விரிவான குழுவொன்றை நியமித்து அது தொடர்பில் குழுவுக்கு அறிவிக்குமாறு குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காமினி வலேபொட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

## "தலை வலிக்குத் தலையணை மாற்றமா?"

தலை வலிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது. இவை அனைத்து கண் கட்டும் வித்தைகள். இவை மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படாது" என்றார்

கொழும்பில் திங்கட்கிழமை (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் இருக்கும் சுகாதார பிரச்சினைகளுக்கு ஓர் அமைச்சரை மாற்றி இன்னோர் அமைச்சரை நியமிப்பதன் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் கூறினால் இதனை நம்ப முடியுமா எனக் கேட்ட அவர், அமைச்சரவை மாற்றத்தில் சங்கீதக் கதிரை விளையாட்டே இடம்பெற்றுள்ளது.

## "பிரச்சினைகளை மூடி மறைக்கும் முயற்சி"

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நிகழ்ந்த முறைகேடுகள், ஊழல்கள் குறித்தும் தரம் குறைந்த மருந்துகள் குறித்தும் முழு நாடுமே கதைத்தது.இந்த அமைச்சர் மாற்றத்தால் இதனை இல்லாமற் செய்யமுடியுமா? இது என்ன நகைப்புக்குரிய விடயமாகும் என்றார்.

ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி கூறுகிறார். அவர் என்ன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரா? இந்நாட்டு சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தேர்தல்கள் திணைக்களம் செயற்படவேண்டும். ஜனாதிபதியின் தேவைக்கேற்ப ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டிய அவசியமொன்றும் இங்கில்லை. சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை அடுத்த வருடம் நடத்தியே ஆக வேண்டும் என்றார்.

## விசாரணை குழு புதன் கூடுகிறது

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பெரேராவால் தான் தாக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, சபையில் தெரிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து அன்றைய அமர்வு 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

பாரிய குற்றச்சாட்டு மற்றும் ஒட்டுமொத்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபை அமர்வு மீண்டும் ஆரம்பமான பின்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இந்தக் குழுவில் பிரதி சபாநாயகருக்கு மேலதிகமாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் மற்றும் கயந்த கருணாதிலக ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளை, இரண்டு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களை குழுவில் இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கவுள்ளதாக பிரதி சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி, பாராளுமன்ற வளாகத்தில் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இந்தக் குழு கூடவுள்ளது.

## மூன்று வருடங்களுக்குள் மீள்குடியேற்றம் நிறைவடையும்

(Kuwait Zakath) வீடமைப்புக் கிராமம் - இரண்டாம் கட்ட அடிக்கல் நாட்டும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (22) கலந்து கொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

125 வீடுகளைக் கொண்ட இந்த-வீடமைப்புக் கிராமம் "குவைத் ஸகாத் ஹவுஸ்" நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு-வருகிறது. இங்கு ஒரு-வீட்டை நிர்மாணிப்பதற்கு 18 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

முதற்கட்டமாக 75 வீடுகள் முன்பு திறக்கப்பட்டன. அதற்காக செலவிடப்பட்ட தொகை 105 மில்லியன் ரூபாய் ஆகும்.

முப்பது வருடகால விடுதலைப் புலிகளின் யுத்தத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வீட்டுத் தேவை 20,276 ஆகும்.

யுத்த காலத்தில் இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்த 3,828 குடும்பங்களைச் சேர்ந்த 9,683 பேர் தற்போது தாய்நாடு திரும்பியுள்ளனர். இடம்பெயர்ந்தவர்களுக்கு வீடுகளை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் அந்த குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அங்கு-அவர்களுக்கு குடிநீர், மின்சாரம், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் செய்து-கொடுக்கப்படும்.

மோதல் சூழ்நிலையினால் இடம்பெயர்ந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களை அவர்களது பூர்வீக கிராமங்களில் மீள்குடியேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## லெபனான் சிறையில் யாழ்.பிரஜை

எம். றொசாந்த்

சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட யாழ்ப்பாணத்தை-சேர்ந்த நபர் ஒருவர் லெபனான் நாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சிறையில் உள்ள தனது கணவரை மீட்டு , நாட்டுக்கு அழைத்து வருமாறு அவரது மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

அது தொடர்பில் தெரியவருவதாவது ,

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியை சேர்ந்த புவனேஸ்வரன் சயந்தன் எனும் இளைஞன் முகவர் ஒருவரை நம்பி, பிரான்ஸ் செல்வதற்காக பெருந்தொகை பணம் கொடுத்துள்ளார்.

அதனை-அடுத்து முகவர் ஒருவர் குறித்த நபரை பல்வேறு நாடுகளுக்கு அழைத்து சென்று இறுதியாக லெபனான் நாட்டின் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டு லெபனான் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அந்நிலையில் லெபனான் நாட்டு சிறையில் உள்ள தனது கணவரை நாட்டுக்கு அழைத்து வருமாறு அவரது மனைவி பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## எம்.பிக்களின் சம்பளத்தை நிர்ணயிக்க அதிகார சபை

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை நிர்ணயம் செய்வதற்கும், அவர்களின் சிறப்புரிமைகளை நிர்ணயம் செய்வதற்கும், நடத்தை விதி மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தனியான அதிகார சபையொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த அதிகார சபையானது ஓய்வுபெற்ற நீதியரசர்கள் குழுவைக் கொண்டிருக்கும்.

சட்டவிரோதமான முறையில் 8 கோடி ரூபாய் பெறுமதியான தங்கத்தை கொண்டு வந்தமைக்காக அபராதம் விதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் சம்பவத்தை அடுத்து இந்த அதிகார சபையை ஸ்தாபிப்பது தொடர்பில் அரசாங்கத்தினால் கவனம் செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் ஒழுக்க விதிகளை இந்த அதிகாரசபை பின்பற்றுவதற்கான சந்தர்ப்பத்தை இந்த சட்டம் வழங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாகன விபத்தில் இருவர் பலி




கொழும்பிலிருந்து கட்டுநாயக்க ஊடாக மட்டக்களப்பு நோக்கி பயணித்த அதி சொகுசு பஸ்ஸொன்று முச்சக்கர வண்டியுடன் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

குறித்த விபத்து கட்டுநாயக்கவில் ஞாயிற்றுக்கிழமை (23) இரவு இடம்பெற்றுள்ளது. அங்கு பிரதேசவாசிகள் ஒன்றுதிரண்டு கோஷமிட்டதால் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. எனினும், பொலிஸார் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் கட்டுநாயக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா பிரதேச செயலகத்தினை

# முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

க. அகரன்

வேலங்குளம் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 08 கிராமங்களைச் சேர்ந்த மக்களினால் வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று திங்கட்கிழமை (23) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தின்போது வவுனியா வேலங்குளம் கிராம சேவையாளரினை அச்சுறுத்தியவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் தங்களுக்கான நிரந்தர கிராம சேவையாளரை நியமிக்கக் கோரி கோசங்களை எழுப்பியதோடு பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

பிரதேச செயலக பிரதான வாயிலை மறித்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பொதுமக்களையும் வெளியேற விடாமல் தடுத்து ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்ததுடன், பின்னர் பிரதேச செயலக அலுவலகத்தினுள்ளும் நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தனிநபர் ஒருவரினால் அப்பகுதியில் உள்ள சிலரின் காணிகளை




அபகரித்துக் கொண்டுள்ளதுடன், இது தொடர்பாகப் பார்வையிடக் கடந்த கஉம் ம் திகதி கிராமசேவையாளர் அப்பகுதிக்குச் சென்றபோது அவரை தகாத வார்த்தைகளால் பேசி அச்சுறுத்தல் விடுத்திருந்தமையால் அவ்விடத்தில் இருந்து கிராம சேவையாளர் அகன்று சென்றுள்ளார்.

மேலும் 2010ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 21ஆம் திகதி எங்களை மீள்குடியேற்றம் செய்திருந்தனர். அன்று தொடக்கம் இன்று வரை கடமையாற்றிய 09 கிராம சேவையாளர்களும் குறித்த நபரினால் ஏற்பட்ட இடையூறு காரணமாக தங்களால் கடமையாற்ற முடியாது என்று தெரிவித்து விலகிச்சென்றுள்ளனர்.

இதன் காரணமாக நாம் எல்லோரும் கூடி எமக்கான நிரந்தர கிராம சேவையாளர் வேண்டும் என்றும் குறித்த தனிநபரின் அட்டூழியம் நிறைவுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கையினை முன்னிறுத்தியே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடிய வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன்,

எமது பிரதேச செயலக பிரிவின் கீழ் 48 கிராம சேவகர் பிரிவில் 28 கிராம



சேவகர்களே உள்ளனர். இதனால் ஒரு கிராம சேவகருக்கு நிரந்தர கிராம சேவகர் பிரிவும், பதில் கடமை பிரிவும் வழங்கப்படுகிறது.

அந்த அடிப்படையில் கிராமசேவையாளர் சர்வேந்திரன் பம்பைமடுவில் பதில் கடமையும் வேலங்குளம் கிராம சேவகர் பிரிவில் பதில் கடமையையும் மேற்கொண்டிருந்தார்.

மேலும், வேலங்குளம் மக்களின் விருப்பத்திற்கு அமைவாகக் குறித்த கிராம சேவகரினை வேலங்குளம் கிரம சேவகர் பிரிவிற்கு நிரந்தரமாக நியமிக்கிறோம்.

அதன் பின்னர் அவருடைய கடமைக்கு யாரும் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, பிரதேச செயலகம் பூரண ஆதரவை வழங்கும் என வாக்குறுதி அளித்ததன் அடிப்படையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

# 20 மாடுகளை வெட்டி காயப்படுத்திய இருவர் கைது

அஸ்ஹர் இப்றாஹிம்



திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீலபொல பிரதேசத்தில் தோட்டத்துக்குள் நுழைந்த மாடுகளை வெட்டிக் காயப்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேருநுவர-நீலபொல பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றுக்குள் புகுந்த இருவர், 20 மாடுகள் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

இவற்றுள் 7 மாடுகளின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் இவற்றின் சிலவற்றின் வயிற்றில் இளம் கன்றுகள் உள்ளதாகவும், இதனால் சுமார் 8 இலட்சம் ரூபாய்களுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மாட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துமாறு மூதூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# மின் கட்டணத்தை எதிர்த்து பந்தமேந்தி ஆர்ப்பாட்டம்




பி.கேதீஸ்



மின் கட்டணத்தை அவ்வப்போது அதிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கலை மற்றும் கினிகத்தேன ஆகிய நகரங்களில் ஞாயிற்றுக்கிழமை (22) இரவு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபால ஏற்பாடு செய்திருந்ததுடன், கினிகத்தேன நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மக்கள் விடுதலை முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தீ பந்தங்களை ஏந்தியிருந்தது டன், பதாதைகளை ஏந்தியவாறும் அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுப்பட்டிருந்தனர்.

# 3 நோய்கள் பரவும் அபாயம்


நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மூன்று தொற்று நோய்கள் பரவி வருவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில பகுதிகளில் கண் நோய், வயிற்றுப்போக்கு, சுவாசக் கோளாறுகளுடன் கூடிய காய்ச்சல் போன்றவை பதிவாகி வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் தமது சுகாதாரப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

# விபத்தில் தந்தை பலி; மகனுக்கு படுகாயம்

எஸ்.தில்லைநாதன்



மோட்டார் சைக்கிள்-பாரவூர்தி மோதிய விபத்தில் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்த்துடன், படுகாயமடைந்த மகன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஏ-9 நெடுஞ்சாலை - செல்வபுரம் பகுதியில் சனிக்கிழமை (23) இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தவிபத்தில் அதே இடத்தை சேர்ந்த கதிரவேலு லட்சுமணன் உயிரிழந்துள்ளார்.

இவர், 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

தந்தையும் மகனும் மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சிக்கு சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, அதே திசையில் பயணித்த பாரவூர்தியுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

பாரவூர்தியின் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# “வாழ முடியாத இடமாக மாறுகிறது உலகம்”



இவ்வுலகமானது அனைவரும் வாழச் சிறந்த இடமாகும். மனிதர்களுக்கு இடையில் புரிந்துணர்வு இல்லாமையால் இன்று மனிதர்கள் வாழ முடியாத இடமாக இவ்வுலகம் மாறிக்கொண்டிருக்கின்றது என கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அவரது இந்த உரை சர்வதேச அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது.

பீஜிங்கில் நடைபெற்ற Belt and Road மன்றத்தின் 10ஆவது ஆண்டு விழாவில் 130 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

இவ்விழாவில் செந்தில் தொண்டமான் உரையாற்றுகையில்,

நண்பர்களாக இருக்க வேண்டிய நாடுகள் இன்று பகைவர்களாக மாறியுள்ளனர். இம்மாநாட்டில் இருக்கும் 130 நாடுகளும் ஒன்றிணைந்து ஆயுத கலாசாரம் முதலில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

செந்தில் தொண்டமான் கருத்து தெரிவிக்கும் வரை இவ்வாயுத மோதல் குறித்து மௌனம் காத்த நாடுகள் அவரின் உரைக்குப் பிறகு அவருடைய கருத்தை மேற்கோள்காட்டிப் பல தலைவர்கள் உரையாற்றியுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில செனட் தலைவர் ராபர்ட் மைல்ஸ் ஹெர்ட்ஸ்பெர்க் செந்தில் தொண்டமானின் பொதுநலமிக்க விவேகமான உரைக்கு நேரில் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

# மண்மேடு சரிந்து விழுந்ததில் மாணவன் பலி



மாத்தறை - கொலொன்ன தடயம் கந்த பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (22) இரவு ஏற்பட்டுள்ளது.

தொரபனே பாடசாலையில் கல்வி பயிலும் 17 வயதுடைய உயர்தர மாணவர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மண்மேடு சரிந்து விழுந்ததால் அப்பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கிணற்றில் விழுந்து தாயும் குழந்தையும் பலி



வாரியபொல- வல்பொல பிரதேசத்தில் வசிக்கும் 6 வயதுக் குழந்தையும் குழந்தையின் தாயும் வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக வாரியபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் பாதுகாப்பு சேவை கல்லூரியில் முதலாம் தரத்தில் கல்வி பயின்ற ஆர்.எம்.கோவித சாரமித் (06) மற்றும் அவரின் தாயாரான 37 வயதுடைய லக்மாலி வீரசிங்க (37) என்பவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் ஞாயிற்றுக்கிழமை (22) வீட்டிற்கு அருகிலுள்ள கிணற்றில் குளிப்பதற்குச் சென்றதாகவும் மாலை 6 மணிக்கு மேலும் இருவரையும் காணாத பட்சத்தில் அயலவர்கள் கிணற்றின் அருகே சோதனையிட்ட போது, குழந்தை மற்றும் தாயின் காலணிகள், உடைகள் என்பவற்றைக் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்து சோதனையிட்டபோது, கிணற்றுக்குள் இருந்து சடலங்களைக் கண்டெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், கிணற்றில் விழுந்த குழந்தையைக் காப்பாற்றத் தாய் கிணற்றில் குதித்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வாரியபொல பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## திருவள்ளுவர் வித்தியாலயத்துக்கு

# குடிநீர் வசதி

யது பாஸ்கரன்



அடிப்படை உட்கட்டுமான வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் கிளி/மலையாளபுரம் திருவள்ளுவர் ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர்க் கிணறும் அதனுடன் இணைந்த குடிநீர் வழங்கல் கட்டமைப்பும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மாணவர்களின் பயன்பாட்டுக்கு திங்கட்கிழமை (23) கையளிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கோரிக்கைக்கு அமைவாக, நியூசிலாந்தில் வசிக்கும் அரியதாஸ் செல்வதாஸ் எனும் நன்கொடையாளரின் நிதிப்பங்களிப்பில், அவரது தாயாரான அமரர்.மேரிரெஜினா அரியதாஸ் ஞாபகார்த்தமாக இக் குடிநீர்க்கிணறு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சிறீதரன் எம்.பியிடம், பாடசாலை அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, ஒலிபெருக்கி வசதியையும், சுற்று வேலி அமைக்கும் பணிகளையும் காலக்கிரமத்தில் மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் வைத்திருந்த கான்ஸ்டபிள் கைது

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மொரட்டுவை கிளாடியஸ் மாவத்தையில் வைத்து மொரட்டுவை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹட்டன் தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் 21 வயதுடைய பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரணை பிரதேசத்தை சேர்ந்த மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள், ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவரா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ‘தலைவலிக்கு தலையணையை மாற்றுவது’ மூடிமறைக்கும் முயற்சி

நாடு பொருளாதார ரீதியில் கடும் வங்குரோத்து அடைந்தமைக்கும் மக்கள் என்றுமில்லாதவாறு துன்பப்படுவதற்கும் பிரதான காரணங்களில் ஊழல், மோசடியே முன்னிற்கிறது. அந்தளவுக்கு எங்குமே இவையிரண்டும் மலிந்து கிடக்கின்றது. அரசாங்க நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் ஏதோவொரு வகையில் மோசடிகள், ஊழல்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. எனினும், தங்களுடைய வயிற்றுப்பிழைப்புக்காகச் சிறிதாகத் திருடியவர்களில் யாராவது ஒரு சிலர் சிக்கிக்கொள்வர்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில், ஆக அடிமட்டத்தில் இருந்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் வரையிலும் பலருடைய கைகளும் சுத்தமில்லை என்பதை விசாரணைகள் அறிக்கையின் தரவுகளின் பிரகாரம் உண்மையாகின்றது. ஆனால், விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர், பதவி மாற்றப்பட்டிருப்பார். இல்லையேல், கட்சித் தாவியிருப்பார். இல்லையேல் மற்றுமோர் அமைச்சுக்குப் பொறுப்பானவராக இருப்பார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமை யாவரும் அறிந்த விடயமாகும். சுகாதார அமைச்சில் இடம்பெற்ற முறைகேடுகள், மருந்து கொள்வனவின்போது இடம்பெற்ற கையூடல்கள், தரமற்ற மருந்தை இறக்குமதிச் செய்தமையால் ஏற்பட்ட உயிரிழப்புகள், விலை குறைந்த மருந்துகளை அதிக விலைகொடுத்து கொள்வனவுச் செய்தமை, தரமற்ற நிறுவனங்களில் இருந்து மருந்துகளையும் ஏனைய வைத்திய உபகரணங்களையும் கொள்வனவு செய்தமை உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகப் பதவியிலிருந்த காலத்தில், அவருக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அப்பிரேரணை அரசாங்கத்தால் தோற்கடிக்கப்பட்டது. சுகாதார அமைச்சரும் பதவியில் இருந்தார். எனினும், ஜனாதிபதி ரணில் அமைச்சரவையில் திங்கட்கிழமை (23) மாற்றத்தை ஏற்படுத்தி, அமைச்சர்களை மாற்றிவிட்டார்.

ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு இதனூடாக தீர்வு காணமுடியுமா? அவரை ஏன்? அமைச்சர் பதவியில் இருந்தே தூக்கவில்லை. மேலே கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் என்ன? என்பதற்கெல்லாம் எதிர்காலமே பதிலளிக்கும். ஏனென்றால், பிரச்சினைகள் அவ்வாறே இருக்கின்றன. குற்றஞ்சுமத்தப்பட்ட அமைச்சர் ஒருவரை நீக்கிவிட்டு, மற்றுமோர் அமைச்சைக் கையளித்தால், அந்த அமைச்சிலும் ஊழல், மோசடிகள் இடம்பெறாது என்பதற்கு உத்தரவாதம் என்ன?

ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தை வரவேற்றுள்ள உதய கம்மன்பில எம்.பி, ஜனாதிபதிக்கு பிந்திய ஞானம் பிறந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த மாற்றத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள பெரமுனவின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான சாகர காரியவசம், அதிருப்தியடைந்துள்ளார். இதனிடையே கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தலைவலிக்குத் தலையணையை மாற்றினால் பிரச்சினைகள் தீராது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டு, பொருளாதார ரீதியில் நாடு தலைநிமிர வேண்டுமாயின் ஊழல், மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டும். தலைகளை மாற்றுவது பிரச்சினைக்குத் தீர்வாகாது.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


## இஸ்ரேலின் அழிச்சாட்டியம்:

# உலக ஒழுங்கு மாற்றங்களை கவனமாக பயன்படுத்த வேண்டிய முஸ்லிம் உலகு

**மொஹமட் பாதுஷா**

இன்னும் ஒரு உலக மகா யுத்தம் வந்து விடுமோ அல்லது அதற்குச் சமமான மனிதப் பேரவலம் இடம்பெற்று விடுமோ என்ற அச்சமும் கவலையும் உலக மக்களை ஆட்கொண்டுள்ளது. அகன்ற பலஸ்தீனத்தில் ஒவ்வொரு நொடியும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற உயிரிழப்புக்களும் இன அழிப்பும் அந்தக் கவலையை ஏற்படுத்துவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

பலஸ்தீன மண்ணை இஸ்ரேல் 75 வருடமாக ஆக்கிரமித்துள்ளது. அதுமட்டுமன்றி அதன் எல்லைகளை அகலமாக்கி இன்னுமின்னும் பலஸ்தீன நிலத்தைச் சூறையாடி வருகின்றது என்பது உலகுக்கே தெரியும். இருப்பினும், இஸ்ரேலின் மீது இம்முறை ஹமாஸ் நடத்திய ஏவுகணைத் தாக்குதல் போரைத் தூண்டும் ஒரு நடவடிக்கை என்ற அடிப்படையில் உலகம் அதனைச் சரி காணவில்லை.

ஆனால், அதற்குப் பதிலடியாக, இன்று வரை சியோனிஸ இஸ்ரேல் பலஸ்தீன முஸ்லிம்கள் மீது மேற்கொண்டு வருகின்ற அழிச்சாட்டியத்தை, அதே உலக மக்கள் மிகக் கடுமையாக எதிர்க்கின்றது. குறிப்பாக, குடிநீர், மின்சாரம், உணவு மற்றும் அடிப்படை வசதிகள் எல்லாவற்றையும் துண்டித்து, தொடர்ச்சியாக பொது மக்கள் மீது இஸ்ரேல் படைகள் நடத்துகின்ற ஈவிரக்கமற்ற குண்டு மழை இஸ்ரேலை உலகின் பொது எதிரியாக ஆக்கிக் கொண்டிருக்கின்றது எனலாம்.

ஹமாஸ் இயக்கத்திற்கு 2006 தேர்தலில் கணிசமான பலஸ்தீனர்கள் வாக்களித்திருந்தனர். இருப்பினும், ஹமாஸ் செய்கின்ற எல்லா காரியங்களையும் சரி என்றோ, அவர்கள் போர் விதிகளைச் சரிவரக் கடைப்பிடிக்கின்றார்கள் என்றோ கூற முடியாது. இஸ்ரேலில் இறந்த அப்பாவி பொது மக்களது உயிர்களும் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே பொதுவான அபிப்பிராமயாகும்.

ஆயினும், அது ஒரு பயங்கரவாத இயக்கமென்று கூறுபவர்கள், பிரச்சினையின் அடிவேரை விளங்க வேண்டும். ஹமாஸ் மட்டுமன்றி, பலஸ்தீன விடுதலை இயக்கம் போல பல போராட்ட குழுக்கள் உருவாகுவதற்கு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பே காரணம் என்பதையும் விளங்கிக் கொள்வது கடினமன்று.

ஒப்பீட்டளவில் ஒரு ஆயுத இயக்கத்தை விட, அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசாங்கமான இஸ்ரேலின் அரசு மிகப் பொறுப்புடனும் சர்வதேச விதிமுறைகளையும் கடைப்பிடித்து போரை நடத்த வேண்டும் என்பது இங்கு முக்கியமானது.

ஆனால், அதனையெல்லாம் பொருட்படுத்தாது, வெண் பொஸ்பரஸ் குண்டுகளைப் பாவித்தமை, அடிப்படை வசதிகளைத் துண்டித்தமை, பொது மக்கள் வசிக்கின்ற இருப்பிடங்கள் மீது தெளிவாகக் குண்டு வீசுகின்றமை போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளின் மூலம் இஸ்ரேல் அந்த சட்ட விதிகளை மீறியுள்ளது.

குறிப்பாக, உலகுக்கே நீதி, நியாயம் போதிக்கின்ற மேற்குலக நாடுகளின் கூட்டாளியும், உலக பொலிஸாரான அமெரிக்காவின் நெருங்கிய சகாவாகவும் இருக்கின்ற இஸ்ரேலின் மெதன்யாஹூ அரசாங்கம், அகன்ற பலஸ்தீனத்தில் உள்ள வைத்தியசாலை மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தி 500இற்கும் மேற்பட்டோரைக் கொன்றதன் மூலம் பகிரங்கமாகவே மிகப் பெரும் போர்க் குற்றத்தை நிகழ்த்தியுள்ளது.

ஆரம்பத்தில் இருந்தே இஸ்ரேல் மேற்கொண்ட அழிச்சாட்டியமும், சர்வதேச போர் மற்றும் மனிதாபிமான விதிகளை மீறும் விதத்திலான சண்டித்தனமான போக்கும், பலஸ்தீன மக்களுக்காக உலகின் பெரும்பாலான நாடுகளும், மக்களும் குரல்கொடுக்கும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம்.

அரபு நாடுகள் ஒன்றுபட்டிருக்கின்றன. மத்திய கிழக்கின் முஸ்லிம் நாடுகளுக்குள்ளும் ஒரு அரசியல் இருக்கின்றது. பலஸ்தீனத்தை ஜோர்தான், எகிப்து உள்ளிட்ட நாடுகள் வரலாற்றில் வஞ்சித்த கதைகளும் உள்ளன. எது எப்படியிருப்பினும், முஸ்லிம்களின் புனிதபூமி என்ற அடிப்படையில் பலஸ்தீனத்தை காப்பாற்றியேயாக வேண்டியது அவர்களின் மதக் கடப்பாடாகவும் உள்ளது.

இந்தப் பின்னணியில் அரபு நாடுகளின் அமைப்புக்கள் காட்டமான அறிக்கையை விடுத்துள்ளன. இஸ்ரேல் மேற்கொள்வது தெளிவான இன அழிப்பு, ஒரு இனத்தை, மதத்தைத் துடைத்தெறியும் ஆக்கிரமிப்பு, பகிரங்கமான போர்க் குற்றம் என நேரிடையாகவே அரபு நாடுகள் சொல்லியுள்ளன.

மறுபுறுத்தில் சீனா, ரஷ்யா போன்ற பல முக்கிய நாடுகள் பலஸ்தீன மக்களின் பக்கம் நிற்கின்றன. அதுமட்டுமன்றி, இஸ்ரேலிற்கு சார்பான நிலைப்பாடுகளை அறிவித்த பல மேற்குலக நாடுகளின் பாராளுமன்றங்களில் உள்ள கணிசமான உறுப்பினர்கள் பகிரங்கமாகவே பலஸ்தீனத்திற்கு ஆதரவையும் இஸ்ரேலிற்கு எதிர்ப்பையும் தெரிவித்துள்ளனர்.

சமகாலத்தில், அமெரிக்கா, பிரித்தானியா என இஸ்ரேலின் கூட்டாளி நாடுகளிலும் கூட பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. மிக முக்கியமாக இஸ்ரேல் உட்பட பல நாடுகளில் உள்ள முற்போக்கான யூதர்களே பலஸ்தீன மக்கள் விடயத்தில் மனிதாபிமானம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வீதிக்கு இறங்கி போராடுவதை காண முடிகின்றது.

இது ஒரு முக்கிய மாற்றமாகும். முஸ்லிம்கள் பற்றியும் பலஸ்தீனம் பற்றியும் இவ்வளவு காலமும் இருந்த தப்பபிப்பிராயங்கள் விலகத் தொடங்கியுள்ளன. அத்துடன், உலக பொலிஸார், நாட்டாமைகள், நீதியின் காவலர்களின் உண்மை முகம் என்ன என்பதையும், பிணத்தின் மேல் அரசியல் செய்யும் மனநிலையையும் இந்த யுத்தம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்தக் காரணத்தினாலேயே அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தமது நிலைப்பாட்டைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டுள்ளன எனலாம்.

ஆரம்பத்தில் இஸேரலுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்த மோடி அரசு, அரபு நாடுகளின் நிலைப்பாடு மற்றும் உலக போக்கை அவதானித்து விட்டு நிலைப்பாட்டைச் சற்று மாற்றியுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்றுக்குப் பிறகு உலக ஒழுங்கு சற்று மாறத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவும் டொலரும்தான் இவ்வுலக நடத்தையை தீர்மானிக்கின்றன என்ற போக்கை மாற்ற ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் முயற்சித்தன. இந்தியா போன்றனவும் துணைநின்றன.

அதன் பிறகு, அமெரிக்காவின் துணையுடன் இடம்பெற்ற மற்றுமொரு யுத்தமான உக்ரேன் - ரஷ்யா போரிலும் அமெரிக்கா நினைத்த வெற்றி கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படியான சூழலில், பெரும்பாலான நாடுகள் எல்லாம் நீதிக்காக, மனிதாபிமானத்திற்காகக் குரல் கொடுக்கின்ற போது, அந்த பொது ஒழுங்கிற்கு வெளியே தாம் நின்றால் உலகின் தலைமை நாட்டாமை என்ற பதவி பறிபோய்விடும் என்பதால், சுதாரித்துக் கொண்டு ‘பலஸ்தீனம் விடுவிக்கப்பட வேண்டும்’ என அறிக்கை விட்டதன் மூலம் நானும் உங்களோடுதான் எனக் காட்டியுள்ளது.

புலஸ்தீன போர் இன்றோ நாளையோ தணியலாம். ஆனால், முன் கணிக்கப்பட்ட இஸ்லாமிய வரலாற்றின் படி, உலகின் கடைசிக்கால யுத்தம் கூட அந்த மண்ணில் இடம்பெறும் என்பதை முன்னைய பத்தியிலேயே குறிப்பிட்டிருந்தோம்.

எது எவ்வாறிருப்பினும், உலகளவில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. கண்முன்னே அநியாயம் நடக்கின்ற போது கண்மூடித்தனமாகத் தவறுகளை ஆதரிக்கும் போக்கில் மாறுதல் தெரிகின்றது. அரசாங்கங்களின் நிலைப்பாடுகளை மீறி, இன, மத, நிற பேதங்களைக் கடந்து நியாயத்திற்காகவும் பேசுகின்ற மக்கள் பொது வெளிக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

நவீன ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் வருகை இதற்கு முக்கிய காரணமாகியுள்ளது எனக் கூறலாம். இதற்கு முன்னைய காலத்தில் இதுபோன்ற இன அழிப்புக்கள், போர்கள், ஆக்கிரமிப்புக்கள், அழிச்சாட்டியங்கள் இடம்பெற்ற போது மேற்குலகம் தனது ஊடகங்கள் ஊடாக தமக்கு விரும்பியவாறு அவற்றைக் காட்சிப்படுத்தி வந்தது. அவர்கள் சொல்வதுதான் செய்தி என்று ஒரு நிலையிருந்தது. ஒரு சம்பவம் நடந்து மூன்று நாட்களுக்குப் பிறகு என்ன நடந்தது என்பதை அவர்களது ஊடகங்கள் சொல்லும் வரை காத்திருக்க வேண்டிய நிலை உலக மக்களுக்கு இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலை மாறியிருக்கின்றது.

பாலஸ்தீனத்தில் இப்போது என்ன நடக்கின்றது என்பதை நேரடியாகவும் ஒளிப்படமாகவும் பல்வேறு கோணங்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு உலகின் கடைநிலை மனிதனுக்கும் கிடைத்துள்ளது. இந்த மாற்றம் அமெரிக்க, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு பெரும் சவாலாகியுள்ளதை பலஸ்தீன யுத்தத்திலும் காண்கின்றோம்.

யூதர்களுக்கு அடைக்கலம் கொடுத்த அகன்ற பலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டு அங்குள்ள மக்கள் மீது குண்டுமழை பொழிகின்றது என்ற செய்தி, எவ்வித ஒளிவுமறைவுமின்றி உலக மக்களுக்குக் கிடைக்கின்றது. ஆக, பலஸ்தீன விவகாரத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு, மேற்குலகின் ஊடகப் பரப்புரைத் தோல்வியும் ஒரு காரணம் எனலாம்.

எனவே, இந்த மாற்றத்தை, நீதியின் பக்கம் மக்கள் நிற்கின்ற சந்தர்ப்பத்தை முஸ்லிம் நாடுகளும் நீதிக்காக, மனித உரிமைக்காகப் போராடுகின்ற அமைப்புக்களும் சரிவரக் கையாள வேண்டும். நாட்பட்ட பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இந்த நல்ல சமிக்கையை மிகக் கவனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமகாலத்தில், இலங்கை போன்று சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழ்கின்ற நாடுகளில் நிலைமைகளைக் கவனமாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கருத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் உள்ளது. ஆயினும், அளவுகடந்த உணர்வு வெளிப்பாடும், விவாதங்களும் பரஸ்பர அறிக்கை விடுதலும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர். ஷ

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்குப் புத்தி உண்டு, சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்குப் பிரதானமானது.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### அதிபர் விடுதியை பாருங்கள்

ஹட்டன் கல்வி வலயம் கோட்டம் இரண்டுக்கு உட்பட்ட பொகவந்தலாவ பிரதேசத்தில் இயங்கும் பாடசாலை ஒன்றுக்குச் சொந்தமான அதிபர் விடுதி ஒன்று நீண்ட காலமாகப் பராமரிப்பு இன்றி கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகின்றது.

இந்த பாடசாலைக்குச் சொந்தமான இந்த அதிபர் விடுதி சுற்றி காடுகளாகக் காட்சியளிப்பதாகவும் இந்த கட்டிடம் குறித்து உரிய அதிபர் கண்டு கொள்ளுவதில்லையென மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க நிதியுதவியில் அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பில் ஹட்டன் வலய கல்விப் பணிமனை மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளர் மற்றும் மத்திய மாகாண ஆளுநர், கல்வி அமைச்சர் ஆகியோர் இந்த அதிபர் விடுதி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டுமெனப் பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதனைச் சுத்தம் செய்து முறையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால், அதிபர் விடுதியாக அல்லாமல் ஒரு வகுப்பறையாகப் பயன்படுத்தலாம் என்றும் தங்களுடைய பிள்ளைகளை அப்பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் உரிய தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் பெற்றோர் வலியுறுத்துகின்றனர்.

- எஸ் சதீஸ்

## யாழ்ப்பாண மண்ணின்

# தனிப்பெரும் அடையாளங்கள்



கிரிஜா அருள்பிரகாசம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





தெல்லிப்பளை பிரதேச பனைவளம், பனை உற்பத்தி தொடர்பாக, தெல்லிப்பளை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருடனான ஒரு சந்திப்பு.

யாழ்ப்பாண மண்ணின் மிகப்பெரும் சொத்துக்களாகவும் தனிப் பெருமை வாய்ந்தவையாகவும் திகழ்பவையே பனைமரங்கள். சிறப்பாக வலிகாமம், தீவகம், போன்ற பகுதிகளில் அதிகளவான பனை வளம் காணப்படுகிறது. ஒப்பில்லாத நன்மைகளை மனிதர்களுக்கு அளிப்பதனால் தான் பனைமரங்கள் 'பூலோக கற்பக விருட்சம்' என்று அழைக்கப்படுகின்றன. அதன் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பனை வளங்களையும், பனை உற்பத்திகளையும் பாதுகாத்து மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவைகளே 'பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள்' ஆகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தெல்லிப்பளை மற்றும் அது சூழ்ந்துள்ள பிரதேசங்களிலிருந்து பெறப்படும் பனங்கள்ளு, பதநீர், மற்றும் பனம் பொருள் உற்பத்தி தொடர்பாகவும் குறித்த தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் தொடர்பாகவும் குறித்த சங்கத்தின் பொது முகாமையாளர் தெளிவுபடுத்தினார்.

**Q தெல்லிப்பளை மற்றும் கீரிமலை பிரதேசங்களில் செயற்பட்டு வருகின்ற தங்களது கூட்டுறவுசங்கத்தின் பிரதான பணிகள் எவை?**

எமது கூட்டுறவுச் சங்கமானது தெல்லிப்பளை மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களின் பனை வளங்களினை பாதுகாத்து அவற்றின் மூலமாகக் குறித்த தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்தக்கூடிய வகையில் பனங்கள் உற்பத்தி, பனம் பதநீர் உற்பத்தி மற்றும் பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் பனைசார் உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றினை உற்பத்தி செய்வதனை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

**Q இலங்கையில் பனைவளத்தினை மக்கள் பயன்படுத்துகின்றமை தொடர்பாக தங்களது கருத்து என்ன?**

பனை வளம் என்பது இயற்கையானது ஏனைய தாவரங்களைப் போன்று இதற்கு பசளையிட்டு, நீர் பாய்ச்சி வளர்க்கவேண்டும் என்ற எந்தத் தேவைப்பாடும் இல்லை. இந்தமரங்கள் இலங்கைக்குப் பதிலாக அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் வளர்ந்திருக்குமானால் அவற்றின் உற்பத்திகளைப் போட்டிப்போட்டு விலைகொடுத்து வாங்கியிருப்போம். சாபக்கேடு போல் இது எம் நாட்டில் வளர்ந்தபடியால் (சிரித்தபடி...) எமது மக்கள் பனை உற்பத்திப் பொருட்களை விலை கொடுத்து வாங்குவதும், அவற்றைப் பயன்படுத்துவதும் மிகக்குறைவு.

**Q பனங்கள்ளிலிருந்து, பனம் பதநீரானது எவ்வாறு வேறுபடுகின்றது?**

பனையில் இருந்து ஆரம்பத்தில் பெறப்படுகின்ற சாறு பதநீர் ஆகும். குறித்த பதநீரானது வளிமண்டலத்திலுள்ள மதுவத்தினால் நொதிக்கப்பட்டே கள்ளாக மாற்றமடைகின்றது. கள்ளில் சிறிதளவு அற்கஹோல் செறிவு காணப்படுகிறது.

பதநீரானது கள்ளாக மாற்றமுறுவதைத் தடுப்பதற்காக பானைகளிற்கு (முட்டிகளிற்கு) சுண்ணாம்பு பூசப்படுகிறது.

சேகரிக்கப்பட்ட பதநீரானது வடிகட்டப்பட்டு, கொதிக்கவைக்கப்பட்டு, பாணியாக்கப்பட்டு பனங்கட்டி, பனங்கற்கண்டு போன்றவை உற்பத்தி செய்ய பயன்படுத்துகின்றோம்.

**Q தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கள்ளுக்கான கேள்வி சந்தையில் எவ்வாறு காணப்படுகிறது?**

யாழ்ப்பாணக் கள்ளினை விரும்பி, அதனைத் தேடி வருவதற்கென்றே பல கூட்டம் உள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு குறிப்பாக கீரிமலை பிரதேசத்திற்கு வருகை தருகின்ற சுற்றிலாப் பயணிகள் குறித்த பிரதேசக் கள்ளினை நாடித்தேடும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. அது மட்டுமல்லாமல் எமது தயாரிப்புகள் கலப்படம் அற்றவையாகவும், மிகவும் சுகாதாரமான முறையிலும், கண் கவர் வடிவிலும் போத்தலில் அடைக்கப்படுகின்றன. இதனால் இவை உள்நாட்டுச் சந்தையினை கடந்து துபாய், ஜேர்மன், பிரான்ஸ், இந்தியா போன்ற பல்வேறு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதுடன் நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கும் பெருங் காரணமாய் அமைந்தது.

**Q தெல்லிப்பளை, கூவில் மற்றும் கீரிமலை பிரதேசங்களிலுள்ள பனங்கள், பலராலும் விரும்பி நுகரப்படும் கள்ளாக காணப்படுகிறது. குறித்த கள்ளினை பெற்றுக்கொள்ள எவ்வாறு பனைமரங்கள் தெரிவு செய்யப்படுகின்றன?**

பனைகளில் ஆண்பனை, பெண்பனை என இரு வகைகள் காணப்படுகின்றன. ஆரம்பகாலமான மாசி மாதம் முதல் சித்திரை மாதம் வரை ஆண் பனையில் இருந்து கள்ளு பெறப்படுகிறது. அதே போன்று, வைகாசி முதல் ஐப்பசி வரையான காலப்பகுதியில் பெண் பனைகளில் இருந்து கள்ளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமையும்.

இவ்வாறு பெறப்படும் கள்ளு மற்றும் பதநீர் மூலமாகவே ஏனைய உற்பத்திகளும் தயாரிக்கப்படுகின்றன.

**Q 'பனங்கள்ளு' வெறுமனே பனங்கள்ளாக மாத்திரம் பயன்படுத்தப்படுகிறதா? அல்லது இது வேறேதும் பதார்த்தங்களாகவும் மாற்றம் செய்யப்படுகின்றனவா ?**

பனையில் இருந்து நேரடியாக உற்பத்தி செய்யப்படுகின்ற பனங்கள்ளானது நேரடியாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் மிதமிஞ்சியிருக்கின்ற கள்ளினை பருவமற்ற காலத்தில் (Off Seassion) பயன்படுத்துவதற்காக போத்தலில் அடைத்துப் பாதுகாக்கின்றோம். மேலதிக கள்ளினை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள மூன்று வடிசாலைகளுக்கு அனுப்பி அதனை மதுசாரமாக்கி வினாகிரி, பனச்சாராயம், போன்ற ஏனைய பொருட்களையும் உற்பத்தி செய்து உள்நாட்டுப் பாவனை மற்றும் ஏற்றுமதிக்கும் பயன்படுத்துகின்றோம்.

**Q பனங்கள்ளினை சேகரிக்கின்ற தொழிலாளர்களது பின்புலம் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகள், சவால்கள் பற்றி குறிப்பிட முடியுமா?**

உண்மையில் பனைமரங்களில் ஏறி பதநீர் மற்றும் கள்ளினை சேகரிப்பதற்கு மிகவும் திறமையும் அனுபவமும் அவசியமாகும். அந்தவகையில் எமது தொழிலாளர்களின் திறமையும் அனுபவமும் மிகவும் பாராட்டத்தக்கதே!. ஆனாலும் பலரும் அறிந்திராத உண்மை ஒன்றும் உள்ளது. இங்கு தொழிலாளர்கள் தமது திறமையின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்ட சம்பளங்களினை பெற்றுக்கொள்கின்றனர்.

நாம் ஒருபோத்தல் கள்ளினை தொழிலாளர்களிடமிருந்து 120 ரூபாவிற்கும், பதநீரினை 110 ரூபாய்விற்கும் கொள்வனவு செய்கிறோம். இத் தொழிலின் மூலம் அதிக வருமானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.


இவ்வாறிருப்பினும், இந்த தொழிலானது இன்னும் பல்வேறு மக்களினால் குறிப்பிட்ட சாதியினருக்குரியதாகவே நோக்கப்படுவதனால் குறித்த தொழிலுக்குரிய அங்கீகாரம் இழக்கப்படுகிறது .

அத்தோடு, குறித்த தொழிலை ஆவணப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் போதும் குறித்த சாதியப்பார்வை காரணமாக பனை ஏறும் தொழிலாளர்களில் சிலர் 'பிள்ளைகள் வளர்ந்துவிட்டனர் இனி வீடியோவில் முகம் காட்டுகிறது சரியில்லை' என உரிய ஆவணப்படுத்ததிலிருந்து விலகிச் செல்லும் நிலையும் காணப்படுகின்றமை வருந்ததக்கதாகும்.

**Q குறித்த தொழிலினை பொருளாதார பெறுமதிவாய்ந்த தொழிலாக மாற்றமடைச் செய்வதற்கு தங்களால் வழங்கக்கூடிய அறிவுரைகள் எவை?**

பனையேறுதல் இகள்ளிறக்குதல் என்பனவும் ஏனைய தொழில்களையொத்தவையே, மாறாக அவை குறிப்பிட்டதொரு சமுதாயவர்க்கத்தினருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல எனும் புத்துருவாக்க எண்ணமானது முதலில் மக்கள் மனதில் உருவாக வேண்டும். இதன் பின்னரே ஏனைய மாற்றத்தை நோக்கி நகரமுடியும். மேலும் அண்மைக் காலத்தில் மரம் ஏறுகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மரம் ஏறக்கூடிய இயந்திரங்களைப் பயன்படுத்தக்கூடிய வசதிகளை ஏற்படுத்துதல் பனைவளம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், ஆராய்ச்சி முறைமைகளை மேற்கொள்ள இளைய சமுதாயத்தினர் முன்வருதலின் பின்னணியிலே இத்தொழிலானது உயிர்ப்புடையதாகும்.

# இடை அழகு



மீண்டும் இடை அழகைக் காட்டி சிவப்பு நிற பாவாடை மற்றும் ஜாக்கெட் மட்டும் அணிந்து, தாவணி போடாமல் நடிகை ரம்யா பாண்டியன் வெளியிட்டுள்ள புகைப்படங்களை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

மம்முட்டிக்கு ஜோடியாக 'நண்பகல் நேரத்து மயக்கம்' என்ற படம் மூலம் மலையாளத்தில் ரம்யா பாண்டியன் அறிமுகமானார். முதல் மலையாள படத்திலேயே சூப்பர் ஸ்டார் நடிகருடன் ரம்யா இணைந்து நடித்ததால் பல இளம் நடிகைகள் இடையே பொறாமையையும் சம்பாதித்து வைத்துள்ளார். தற்போது 'இடும்பன் காரி' என்ற படத்தில் ரம்யா நடித்து வருகிறார். விரைவில் இப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. மேலும் 'ஆக்சிடென்டல் ஃபார்மர் அண்ட் கோ' என்ற வெப் சீரிஸிலும் அவர் நடித்து வருகிறார்.

இதனிடையே தொடர்ந்து தனது சமூகவலைத்தள பக்கங்களில் கவர்ச்சி உடை அணிந்து புகைப்படங்கள் வெளியிடுவதை மட்டும் அவர் இதுவரை நிறுத்தவில்லை. தற்போது சிவப்பு நிற பாவாடை மற்றும் ஜாக்கெட் மட்டும் அணிந்து, தாவணி அணியாமல் இடுப்பைக் காட்டி இளம் ரசிகர்களை அவர் கவர்ந்துள்ளார்.

# சத்யராஜ் மகள் அறிவிப்பு



பிரபல நடிகர் சத்யராஜ் மகள் திவ்யா, ஒரு ஊட்டச்சத்து நிபுணர் என்பதும் சமூக ஆர்வலரான இவர் மகிழ்மதி இயக்கம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்பது அனைவரும் அறிந்ததே. குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு நீக்கும் சமூக சப் பணியைச் செய்து வரும் திவ்யா, தற்போது இலங்கை மற்றும் மணிப்பூர் மக்களுக்கு உதவி செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

தனது மகிழ்மதி இயக்கம் மூலம் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை மற்றும் மணிப்பூரில் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள மக்களுக்கு உதவத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளார்.

# நானியுடன் மோதுகிறார்





தெலுங்கு நடிகரான நானி, தசரா படத்தைத் தொடர்ந்து தனது ந□ஆவது படமான 'ஹாய் நான்னா' படத்தில் நடித்து வருகிறார். இதில் அவருக்கு ஜோடியாக மிருணாள் தாக்கூர் நடிக்க, அறிமுக இயக்குநர் சவுரியா இந்தப் படத்தை இயக்கி வருகிறார். இப்படம் தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட ஐந்து மொழிகளில் டிசெம்பர் 7ஆம் திகதி வெளியாகவுள்ளது.


இப்படத்தையடுத்து தன்னை வைத்து ஏற்கனவே இயக்கிய 'அடடே சுந்தரா' பட இயக்குநர் விவேக் ஆத்ரேயா இயக்கத்தில் மீண்டும் நடிக்கவுள்ளார் நானி.

இப்படத்தை ஆர்.ஆர்.ஆர் படத் தயாரிப்பு நிறுவனமான டி.வி.வி. தனய்யா என்டர்டெயின்மென்ட் தயாரிக்கிறது. இதில் கதாநாயகியாக பிரியங்கா மோகன் நடிக்கவுள்ளார்.

இந்த நிலையில் இப்படத்தின் வில்லன் பற்றிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது. அதன்படி எஸ்.ஜே. சூர்யா, நானியுடன் மோத ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 'GirlFriend' மாறுகிறார்





நடிகை ராஷ்மிகா மந்தனா ”ரெயின்போ: படத்திற்கு பிறகு மீண்டும் *“The GirlFriend”* எனும் படத்தில் டுதன்மை காதாபாத்திரத்தில் நடிக்கின்றார். இந்த படத்தை பாடகி சின்மயி கணவர் மற்றும் இயக்குநர், நடிகர் ராகுல் ரவீந்திரன் இயக்குகிறார்.

இந்த படத்ததை கீதா ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கின்றனர். இதற்கு ஏசம் அப்துல் வாகப் இசையமைக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது,

# சொத்து மதிப்பு தெரியுமா?



நடிகர் விஜய்யின் மனைவி சங்கீதா லண்டனில் தொழிலதிபராக இருக்கும் சொர்ணலிங்கம் என்பவரின் மகளாவார். லண்டனில் பிறந்து வாழ்ந்து அவர் அவ்வப்போது இந்தியா வரும் போது விஜய்யை பார்க்க வருவதை வழக்கமாக வைத்துள்ளார்.

அப்போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ள நிலையில், இரு வீட்டாராம் பேசி இருவருக்கும் திருமணம் செய்து வைத்துள்ளனர். விஜய் - சங்கீதா ஜோடிக்கு சஞ்சய் மற்றும் திவ்யா என இரு பிள்ளைகள் உள்ளனர்.

சங்கீதாவின் பெயரில் இருக்கும் சொத்து மதிப்பு மட்டுமே சுமார் ரூ. 400 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. நடிகர் விஜய் தனது மனைவியின் பெயரில் பல கோடி சொத்துக்களை வாங்கி வைத்துள்ளாராம்.

சங்கீதாவின் தந்தையும் தனது மகளின் பெயரில் பல கோடி மதிப்பிலான சொத்துக்களை எழுதி வைத்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால், இந்த சொத்து விவரம் குறித்து கூறப்படும் தகவல் எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய பிரதேசம்

பெண்களை வன்கொடுமை செய்தால்

# தூக்குத் தண்டனை

இந்தியாவில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. அண்மையில் மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறையில் இரண்டு பெண்கள் நிர்வாணமாக அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. மேலும் காஷ்மீர், ராஜஸ்தான்,



உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், டெல்லி உள்ளிட்ட பல மாநிலங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

அண்மையில் மத்தியப்பிரதேச மாநிலத்தில் சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பா.ஜ.க. அரசைக் கடுமையாக விமர்சித்தனர். இந்நிலையில், மத்தியப் பிரதேசத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அம்மாநில முதல்வர் சிவராஜ் சவுகான், பெண்களுக்கு எதிரான குற்றத்தில் ஈட்டுபவர்களின் வீடுகள் இடிக்கப்படும் என்றும் தேவைப்பட்டால் குற்றவாளிகள் தூக்கில் போடப்படுவார்கள் என்றும் அதிரடியாக அறிவித்துள்ளார்.

கர்நாடகா

# ஹிஜாப் அணிந்து பரீட்சை எழுதலாம்

கர்நாடகாவில் கடந்த 2022ஆம் ஆண்டு, பாடசாலைகளில் ஹிஜாப் அணிந்து வர அனுமதி வழங்கக் கோரி முஸ்லிம் மாணவிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டம் மாநிலம் முழுவதும் பரவிய நிலையில், கர்நாடக உயர்நீதிமன்றம், பாடசாலைகளில் மத அடையாள அணிகளை அணிந்து வரத் தடை விதித்தது.



இந்தத் தீர்ப்பால் முஸ்லிம் மாணவிகள், தேர்வாணையம் நடத்தும் பரீட்சைகளில் ஹிஜாப் அணிந்து எழுத முடியாத நிலையில் இருந்தனர். இந்நிலையில், இதுகுறித்து பேசிய அமைச்சர் சுதாகர், “தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் மாணவ, மாணவிகள் தங்களின் தனிப்பட்ட உடைகளை அணிந்து கொள்ள அனுமதி வழங்கப்படும். மாணவிகள் ஹிஜாப் அணிந்து பரீட்சை எழுத விரும்பினால், அதற்கு அனுமதி வழங்கப்படும்” என்று தெரிவித்தார்.


கேரளா

# குப்பையில் வீசிய லொட்டரி சீட்டால் அதிர்ஷ்டம்

இந்தியாவின் கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் மூலவட்டம் பகுதியைச் சேர்ந்தவர் சுனில் குமார் (வயது 53). இவர் முச்சக்கர வண்டி சாரதியாக உள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு லொட்டரி குலுக்கல் பரிசு திட்டத்தில் லொட்டரி சீட்டு ஒன்றை வாங்கியுள்ளார். இதற்கான முதல் பரிசு ரூ.1 கோடியாகும். தொடர்ந்து லொட்டரி சீட்டுக் குலுக்கல் நடத்தப்பட்டு மறுநாள் பரிசு பெற்றவர்கள் விவரங்கள் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே தனக்குப் பெரியளவில் பரிசுத் தொகை



லொட்டரியில் கிடைக்காது என கருதித் தான் வாங்கியிருந்த லொட்டரி சீட்டை வீட்டில் உள்ள குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு வழக்கமான வேலையைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்.

அதன்பின்னர் லொட்டரி சீட்டு பற்றிய எண்ணம் அவரது மனதில் ஓடிக்கொண்டே இருந்துள்ளது. இதையடுத்து தான் குப்பைத் தொட்டியில் வீசிய லொட்டரி சீட்டைக் குப்பை கழிவுகளைக் கிளறி ஒருவழியாகத் தேடிக் கண்டுபிடித்து எடுத்தார்.

அப்போது அந்த லொட்டரியில் அவரே எதிர்பாராத வகையில் முதல் பரிசான ரூ.1 கோடி விழுந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதை அறிந்ததும் சுனில்குமார் அளவில்லா மகிழ்ச்சியடைந்தார்.

இந்த ரூ.1 கோடியை வைத்து, புதிய வீடு கட்ட உள்ளதாகவும், வாங்கிய கடன் அனைத்தையும் அடைக்க உள்ளதாகவும், தனக்குத் தெய்வம் பரிசை வழங்கி உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிபயங்கர தாக்குதலுக்கு

# தயாராகிறது ஹமாஸ்

காசா மீது தொடர்ந்து 17ஆவது நாளாக இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றது. காசாவிற்குள் தரைவழி தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு இஸ்ரேல் எல்லையில் வீரர்களைக் குவித்துள்ளது.

இந்நிலையில், சயனைட் கலந்த இரசாயன வெடிகுண்டுகளை வீச ஹமாஸ் அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேல் ஜனாதிபதி ஈசாக் ஹெர்ஜோக்



உறுதிப்படுத்தியுள்ளார்.

சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இது அல்-கொய்தாவை அடிப்படையாகக் கொண்டது. 2003ஆம் ஆண்டு அந்த பயங்கரவாத அமைப்பு மேற்கொண்ட திட்டத்துடன், தொடர்புடையது. நாங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்., அல்-கொய்தா மற்றும் ஹமாஸ் அமைப்புகளை எதிர்கொண்டு வருகிறோம் என்று கூறியுள்ளார்.

பிலிப்பைன்ஸ்

# “குறி வைத்து சீனா தாக்குகிறது”

மேற்கு பசிபிக் கடலில், கடல்வழி போக்குவரத்திற்கு மிக அத்தியாவசியமான இடமாகக் கருதப்படுவது வட சீன கடல் பகுதி. இந்த கடற்பகுதி வழியாக உலகின் 21 சதவீதத்திற்கும் அதிகமான உலக வர்த்தக கப்பல் போக்குவரத்து கையாளப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்த வட சீன கடல் பகுதியில் இரண்டாம் தாமஸ் ஷோல் (shoal) எனும் நீர்மட்டம் குறைவான கடல் பகுதி உள்ளது. இப்பகுதி மீது சீனாவும் பிலிப்பைன்ஸும் உரிமை கொண்டாடுவதால் சர்ச்சைக்குரிய பகுதியாகக் கருதப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் இப்பகுதியில் தன் நாட்டுக் கப்பல்களை நிலைநிறுத்தி இக்கப்பல்களுக்கு மாதாந்திர அத்தியாவசிய பொருட்கள், சிறிய படகுகளில் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில், இரு வெவ்வேறு சம்பவங்களில் பிலிப்பைன்ஸிற்கு சொந்தமான ஒரு சரக்கு விநியோக படகின் மீதும், ஒரு கடலோர கப்பற்படை கப்பல் மீதும், சீனாவின் கடலோர கப்பற்படை கப்பல், வேண்டுமென்றே மோதியதாக பிலிப்பைன்ஸ் குற்றம் சாட்டியுள்ளது.




ஆனால் இதனை மறுத்துள்ள சீனா, “பிலிப்பைன்ஸ் வேண்டுமென்றே சர்ச்சையை உருவாக்குகிறது” என தெரிவித்துள்ளது.

இது குறித்து பிலிப்பைன்ஸ் “எங்கள் நாட்டுக் கடல்வழி போக்குவரத்தைச் சீனா தடுக்க நினைக்கிறது. இதற்காக அந்நாடு ஆபத்தான வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது. இதனால் கடல் பயணம் மேற்கொள்ளும் எங்கள் நாட்டினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது” என தெரிவித்துள்ளது.

இக்கடல் பகுதியில் பிலிப்பைன்ஸை தவிர மேலும் பல நாடுகளின் பல பகுதிகளுக்கு, சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இதன் காரணமாக வியட்னாம், தைவான், மலேசியா மற்றும் புரூனே ஆகிய நாடுகள் சீனாவுடன் சுமூக உறவில்லாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணம்:

# நியூசிலாந்தை வீழ்த்திய இந்தியா



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், தரம்சாலாவில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற நியூசிலாந்து உடனான போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

நியூசிலாந்து: 273/10 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: டரைல் மிற்செல் 130 (127), றஷின் றவீந்திர 75 (87) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஷமி 5/54, குல்தீப் யாதவ் 2/73, மொஹமட் சிராஜ் 1/45, ஜஸ்பிரிட் பும்ரா 1/45)

இந்தியா: 274/6 (48 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 95 (104), றோஹித் ஷர்மா 46 (40), இரவீந்திர ஜடேஜா ஆ.இ 39 (44) ஓட்டங்கள். பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன் 2/63, மிற்செல் சான்ட்னெர் 1/37, மற் ஹென்றி 1/55, ட்ரெண்ட் போல்ட் 1/60)

போட்டியின் நாயகன்: மொஹமட் ஷமி

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# ஏ.சி மிலனை வென்ற ஜுவென்டஸ்


இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஏ.சி மிலனின் மைதானத்தில் திங்கட்கிழமை (23) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் வென்றது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை மனுவல் லொகடெல்லி பெற்றிருந்தார்.



தென்னாபிரிக்காவுக்கெதிரான போட்டியில்

# தஸ்கின் விளையாடுவது சந்தேகம்?



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், மும்பையில் இன்று செவ்வாய்க்கிழமை (24) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள தென்னாபிரிக்காவுக்கெதிரான போட்டியில் தோட்பட்டை காயமொன்று காரணமாக பங்களாதேஷின் வேகப்பந்துவீச்சாளர் தஸ்கின் அஹ்மட் விளையாடுவது சந்தேகமெனக் கூறப்படுகிறது.

பங்களாதேஷ் இறுதியாக விளையாடிய இந்தியாவுக்கெதிரான போட்டியில் காயம் காரணமாகப் பங்கேற்றிருக்காத தஸ்கின், நேற்று முன்தினப் பயிற்சிகளில் பங்கேற்றிருக்கவில்லை.

# உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறிய டொப்லி



இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் றீஸ் டொப்லி, தனது சுட்டு விரலில் ஏற்பட்ட முறிவொன்று காரணமாக விலகியுள்ளார்.

தென்னாபிரிக்காவுகு எதிரான போட்டியின்போது தான் பந்து வீசுகையில் பந்தை நிறுத்த முயன்றபோதே டொப்லிக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், டொப்லியை இங்கிலாந்துக் குழாமில் இன்னொரு வேகப்பந்துவீச்சாளரான பிறைடன் கார்ஸ் பிரதியிட்டுள்ளார்.

ஐ. அமெரிக்க குரான் பிறி

# வென்ற வெர்ஸ்டப்பன்



ஐக்கிய அமெரிக்க குரான் பிறீயானது திங்கட்கிழமை (23) அதிகாலை நடைபெற்ற நிலையில், பந்தயத்தை ஆறாமிடத்திலிருந்து ஆரம்பித்த இவ்வாண்டு சம்பியனானவதை ஏற்கெனவே உறுதிப்படுத்தியுள்ளார் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார். இரண்டாம் இடத்திலிருந்து பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் பெற்றதோடு, மூன்றாமிடத்தைப் பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் கார்லோஸ் சைன்ஸ் ஜூனியர் பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 24 ஒக்டோபர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.